Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 160/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW6 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சோமசுந்தரம் |
| Father's Name | – | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 04th March 2026.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது குடிமைப் பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு துறையில் கோயமுத்தூர் அலகில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் ஆனைமலை வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, ஆழியார் காவல்நிலைய பொறுப்பு காவல் ஆய்வாளராக இருந்தபோது, ஆழியார் காவல்நிலையக் குற்ற எண்.60/2017, சட்டப்பிரிவுகள் 457, 380 இதசவின் கீழ் பதிவு செய்து புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, வழக்கின் எதிரியையும் களவு போன வழக்குச் சொத்தையும் தேடி வந்தநிலையில், 11.05.2017 ம் தேதி கோட்டூர் காவல்நிலைய குற்ற எண்.99/2017, பிரிவு 397 இதசவின் வழக்கின் எதிரி மற்றும் களவு சொத்துக்களை தேடி நானும், போலீஸ் பார்ட்டி சகிதமான கோட்டூர், குமரன்கட்டம், சங்கம்பாளையம் ஆகிய இடங்களில் கண்காணித்தும் பின்னர் 13.30 மணிக்கு என்.எம்.சுங்கம், உடுமலை ரோட்டில் உள்ள நின்றுக் கொண்டிருந்த எதிரியை வாதி அடையாளம் காட்ட பிடித்து விசாரித்தபோது, தனது பெயர் விலாசத்தை மாறிமாறி சொல்லியும் கடைசியாக தனது பெயர் வெங்கடேசன், த/பெ. தண்டபாணி மற்றும் விலாசத்தை கூறியும், பின்னர் அவர் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஜெயராஜ் மற்றும் ஆறுமுகம் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்தேன்.

மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் கடந்த 08.05.2017 ம் தேதி இரவு கம்பாலப்பட்டியில் ஸ்டுடியோவின் பூட்டை உடைத்து திருடியதை ஒப்புக்கொண்டுள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.7** ஆகும். பின்னர் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் களவு சொத்தான BenQ Monitor – 1, AOC Monitor – 1, LG CPU -1, Dell CU -1, Genius Key Board – 1, Samsung Key Board – 1, Mouse – 2, Epson Pm 270 பிரிண்டர் - 1 ஆகியவற்றை எதிரி எடுத்து ஆஜர்படுத்தியதை சாட்சிகள் லாரன்ஸ் மற்றும் சதீஷ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் 16.30 மணி முதல் 17.00 மணிவரை கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.8** ஆகும்.

பின்னர் மேற்படி சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் எதிரியையும் களவு சொத்தையும் நிலையம் கொணர்ந்து எதிரிக்கு திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.9** ஆகும். பின்னர் இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிக்கெதிராக மேற்படி சட்டப்பிரிவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் வைத்து

தயாரிக்கப்பட்டது என்றும் சம்பவ இடத்திற்கே போகாமல் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறுதலாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளது என்றாலும், கைப்பற்றப்பட்ட பொருளுக்கும் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையென்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No.II,
Pollachi